# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2097/45 - 2018 නොවැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2018.11.16

2097/45 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறியீட்டு இலக்கம்: டிக்/ லேன்/ 02/ 47.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மாத்தறை மாவட்டத்தில், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், பதீகம மேற்கு கிராம அலுவலர் பிரிவில் பதீகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் இலக்கம் மு. பி. மாறை 2743 ஆம் முன்னீட்டு வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள கீழ்வரும் காணித் துண்டின் விபரம்:

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: வன்னிஆரச்சி கங்கானம்கே கெதரவத்த இத்தேபெனேவத்த, ரதுராலகெவத்த, இஹலவெரலுகஹவத்த, தமனியகஹவத்த உடன் தியவரகஹகொரட்டுவ; விபரம்: பற்றைக்காடு; உரிமை கோருவோர்: டபிள்யூ. டி. சுஜீவ பிரசன்ன, இலக்கம் 145/48, லெஸ்லிரணகல பாதை, பொரெல்ல, கொழும்பு; விஸ்தீரணம்: 0.9603 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திக்வெல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. எஸ். ரஞ்ஜித,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

பிரதேச செயலகம்,
திக்வெல்ல,
2018, நவெம்பர் 12.

11 - 1397


1A - G 28972 - 17 (2018/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*